<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.55/2021 பெயர்-செங்கோட்டையன் நாள்.19.06.2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் எம்.இ. படித்துள்ளேன். நான் சென்னையில் ஒரு ஐடி அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறேன். நான் எவ்வளவு வருடமாக சென்னையில் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சுமார் 25 வருடமாக வேலை பார்த்து வருகிறேன். நிரந்தர பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2,3 பிரதிவாதிகள் உறவினர்கள் அல்ல என்றால் சரிதான். அவர்கள் கூட்டு பங்குதாரர்கள். 1 ம் பிரதிவாதி தனபால் என்னுடைய கூட்டு பங்குதாரர், நண்பரும் அல்ல, உறவினரும் அல்ல. 2,3 பிரதிவாதிகள் விவசாய தொழில் செய்து வருகிறார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுதற்கு முன்பாக 2,3 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 3,4 வருடங்களாக பிரச்சினை இருந்தது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 45 செண்ட் ஆகும். தாவா சொத்து முழுவதும் வில்லரசம்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் பழைய க.ச.எண்.5 மற்றும் 6, ரீ.ச.எண்.278 ஆகும். 2,3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரைகளை பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அதை மறுத்து எந்த பதிலுறையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)